# சிரிக்கச் சிரிக்கச் சரித்திரம் 2.0




முகில்

மாணவர்களுக்கான ஜாலியான
வரலாற்றுப் புத்தகம்

# சிரிக்கச் சிரிக்கச் சரித்திரம் 2.0

**முகில்**

KNOX

**1947, ஆகஸ்ட் 15 அன்று இந்தியா சுதந்தரம் அடைந்தது.**

**உலகத்தைக் கடல் வழியாக முதன் முதலில் வலம் வந்தவர் மெகல்லன்.**

**முதலாம் பானிபட் போர் 1526-ம் ஆண்டு நடைபெற்றது.**

**உலகில் ஏழாவதாகக் கண்டறியப்பட்ட கண்டம் அண்டார்டிகா...**

**இவை மட்டும் வரலாறு அல்ல. இவை நம் பாடப்புத்தகத்தில் நிரம்பியுள்ள வரலாற்றுத் தகவல்கள். உண்மையில் வரலாறு என்பது அவ்வளவு சுவாரசியமானது, சுவையானது, சிலிர்ப்பூட்டுவது, அச்சமூட்டுவது, நெகிழச் செய்வது, மகிழச் செய்வது, கலகலவெனச் சிரிக்கவும் வைப்பது.**

புன்னகை தரும் வரலாற்றுப் பக்கங்களை மட்டும், நாம் இந்தப் புத்தகத்தில் **படிக்கலாம். ரசிக்கலாம். சிரிக்கலாம்.**

**

## சிரிக்கச் சிரிக்கச் சரித்திரம் 1.0 மின்நூலுக்கு வாசகர்கள் அளித்த வரவேற்புக்கு அன்பும் நன்றியும்!

Knox e_Library



# மேரியின் ஆட்டுக்குட்டி!

Mary had a little lamb ரைம்ஸை எல்லோருமே பாடியிருப்போம். மேரியிடம் ஓர் ஆட்டுக்குட்டி இருந்தது. ஒருநாள் அது அவளுடன் பள்ளிக்கூடத்துக்கு வந்தது. குழந்தைகள் எல்லோரும் அதைப் பார்த்துச் சிரித்தார்கள் என்று அந்தப் பாடல் நீளும்.

சுவாரசியமான விஷயம் என்னவென்றால் இதெல்லாம் நிஜமாகவே நடந்த சம்பவங்களே. அமெரிக்காவின் நியு ஹேம்சயர் மாகாணத்தில் நியுபோர்ட் என்ற ஊர் இருக்கிறது. அங்கே சாரா ஹேல் என்ற பெண் தனது வீட்டுக்கு அருகில் சிறு குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றை அமைத்தாள். ஒருநாள் காலையில் அவளது மாணவியான சிறுமி மேரி வகுப்புக்குள் நுழைந்தாள். அவளது பின்னாலேயே ஆட்டுக்குட்டி ஒன்றும் சத்தமின்றி நுழைந்தது. வகுப்பிலிருந்தவர்கள் அனைவரும் ‘ஹோ’ எனச் சத்தம் எழுப்ப, சாரா ஆச்சரியத்துடன் மேரியைப் பார்த்தாள். வகுப்புக்கு ஆட்டுக்குட்டியை எல்லாம் அழைத்துவரக்கூடாது என்று அதனை வெளியில் விடச் சொன்னாள். பள்ளிக்கூடம் முடியும் வரையில் ஆட்டுக்குட்டி மேரியைக் காண முடியாமல் அங்கும் இங்கும் பரிதவித்தது. ‘இந்த ஆட்டுக்குட்டி மேரியை ஏன் இவ்வளவு நேசிக்கிறது?’ என்று வகுப்பில் குழந்தைகள் கேட்க, ‘ஏனென்றால் மேரியும் தன் ஆட்டுக்குட்டியை அவ்வளவு நேசிக்கிறாள்’ என்றாள் சாரா.

சாரா ஹேல்தான் பிறகு Mary had a little lamb பாடலை எழுதினார். 1830-ம் ஆண்டில் வெளியான சாராவின் கவிதை நூல் ஒன்றில் அந்தப் பாடல் முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது. இன்னொரு சர்ச்சையும் உண்டு. 1876-ம் ஆண்டில் மேரி டெய்லர் என்ற அமெரிக்கப் பெண், ‘Mary had a little lamb’ பாடலில் வரும் மேரி நான்தான். சிறுவயதில் நான்தான் எனது ஆட்டுக்குட்டியைப் பள்ளிக்கு அழைத்துச் சென்றேன்’ என்றார். அதற்குச் சில ஆதாரங்களையும் அவர் கொடுத்தார்.

எது எப்படியோ, மேரியின் ஆட்டுக்குட்டி இன்னமும் பள்ளிக்கூடத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது. பாடலாக.

**தக்காளி டானிக்!**

‘அய்யா வயித்த வலிக்குது’ என்று அந்த டாக்டரிடம் போய் நின்றால் அவர் கெட்டியாக, சிவப்பு நிறத்தில் மருந்து ஒன்றைக் கொடுப்பார். பேதி ஆகிறது என்று போனாலும் அதே கெட்டிச் சிவப்பு நிற மருந்துதான். கை, கால் மூட்டுகளில் வலி, மஞ்சள் காமாலை, வயிற்றில் செரிமானப் பிரச்னை என்றாலும் அந்த டாக்டர், அதே மருந்தைத்தான் கொடுத்தார்.

அந்த டாக்டர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் வாழ்ந்தவர். அவர் பெயர் ஜான் குக் பென்னட். அவர் கொடுத்த அந்த மருந்தை இன்றைக்கும் நாம் சப்புக் கொட்டி ருசித்துக் கொண்டிருக்கிறோம். ரொட்டி, பாஸ்தா, நூடுல்ஸ், சப்பாத்தி என்று பலவற்றுக்கும் தொட்டுக் கொண்டு சுவைக்கிறோம். அந்த மருந்தின் இன்றைய பொதுப்பெயர் கெட்ச்-அப். ஆம், Tomato Ketchup-தான்.

பதினெட்டாம் நூற்றாண்டில் மீன்கள் கொண்டும், காளான்கள் கொண்டும் கெட்ச்-அப்கள் தயாரிக்கப்பட்டன. 1834-ல் ஜான் குக், தக்காளி சேர்த்து கெட்ச்-அப் தயாரித்தார். அதில் ஏகப்பட்ட வைட்டமின்கள் இருப்பதாகவும், அவை நோய் எதிர்ப்புச் சக்தியைத் தர வல்லவை என்றும் கூறினார். எனவே கெட்ச்-அப்பை நோய் தீர்க்கும் அபூர்வ மருந்தாக உபயோகித்தார். ஜான் குக், டாக்டர் என்பதைத் தாண்டி, சமூகத்தில் புகழ்பெற்ற முக்கியஸ்தராகவும் இருந்ததால், மக்கள் அவர் கொடுத்த கெட்ச்-அப்பை வாங்கி, நம்பிக்கையுடன் நக்கிக் கொண்டு சென்றார்கள். அதனால் நோய் குணமானதாக நம்பவும் செய்தார்கள்.

சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேல் கெட்ச்-அப் பல நோய்களைத் தீர்க்கும் அருமருந்து என்று அமெரிக்கா

நம்பிக் கொண்டிருந்தது. பின் அமெரிக்கர்கள் விரும்பும் அதி உன்னத உணவுப் பொருளானது வரலாறு.

**சுச்சூ போன பிக்கிள்ஸ் - ஸ்டார் ஆன கதை!**

1966, மார்ச் 27. லண்டனின் தென்கிழக்குப் பகுதியில் டேவிட் கோர்பெட் என்பவர் தனது நாய் பிக்கிள்ல் உடன் வாக்கிங் சென்று கொண்டிருந்தார். சுச்சூ போவதற்காக ஒரு புதர்ப்பகுதியில் ஒதுங்கிய பிக்கிள்ஸ், அங்கே செய்தித்தாள் சுற்றப்பட்டிருந்த பெட்டி ஒன்றை மோப்பம் பிடித்துக் குரைத்தது. டேவிட் அந்தப் பெட்டியைச் சந்தேகத்துடன் எடுத்துப் பார்த்தார். செய்தித்தாளை விலக்கி பெட்டியைத் திறந்தார். உள்ளே ஏதோ ஒரு கோப்பை இருப்பதைக் கண்டார்.

1930 சாம்பியன் உருகுவே, 1934 சாம்பியன் இத்தாலி என்று வரிசையாக நாடுகளின் பெயர்கள் அந்தக் கோப்பையில் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டார். திகைத்து நின்றார். ஏனென்றால் அந்த ஆண்டில் இங்கிலாந்தில் உலகக்கோப்பைக் கால்பந்து போட்டிகள் ஜூலை மாதத்தில் நடக்கவிருந்தன. மார்ச் 20 அன்று, அங்கே வெஸ்ட்மின்ஸ்டர் சென்ட்ரல் ஹாலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அந்த கால்பந்து உலகக்கோப்பை திருடு போயிருந்தது.

அதனால் இங்கிலாந்தே கவலையில் ஆழந்திருந்தது. தீவிர விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இன்னொரு பக்கம், என்னிடம்தான் கோப்பை இருக்கிறது என்று சொல்லி, யார் யாரோ போன் செய்து பணம் கேட்டும் மிரட்டிக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டச் சூழலில்தான் பிக்கிள்ஸ் என்ற நாய் கோப்பையை எதேச்சையாக மோப்பம் பிடித்து ‘வவ் வவ்’ என்றது.

கண்டெடுக்கப்பட்ட அந்த கால்பந்து உலகக்கோப்பையின் பெயர், ஜூல்ஸ் ரிமெட் கோப்பை. டேவிட் கோர்பெட் அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு கோப்பையுடன் விரைந்தார். கப்பலேறியிருந்த இங்கிலாந்தின் மானம், வவ்வவ் பிக்கிள்ஸ் மூலமாக மீண்டும்

தரையிறக்கப்பட்டது. இந்தப் பரபரப்புகளுக்குப் பிறகு நடந்த அந்த உலகக் கோப்பைப் போட்டியில் இங்கிலாந்தே சாம்பியன் பட்டம் வென்று பெருமை தேடிக்கொண்டது.

தாங்கள் வென்ற கோப்பையை, இங்கிலாந்து அடுத்த நான்கு வருடங்களுக்குப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டது. பிக்கிள்ஸ், இங்கிலாந்தின் நட்சத்திரமானது. உலகம் விரும்பும் உன்னத நாயானது. அதற்கெனப் பரிசுத் தொகை குவிந்தது. கோப்பையை வென்ற இங்கிலாந்து அணி வீரர்களுடன் அது டின்னர் உண்டது. சில திரைப்படங்களிலும் நடித்து சுபிட்சமாக வாழ்ந்தது.

ஆனால், கடைசி வரை அந்தக் கோப்பையைத் திருடியது யார் என்று போலீஸ் கண்டுபிடிக்கவே இல்லை.

## பொய் அல்ல, பொய்தான்!

அமெரிக்காவின் முதல் அதிபராகக் கருதப்படும் ஜார்ஜ் வாஷிங்டன் ஆறு வயதுச் சிறுவனாக இருந்தபோது அவரது தந்தை ஒரு சிறிய கோடாரியைப் பரிசளித்தார்.

அதைக் கையில் வாங்கியதும் ஜார்ஜுக்குள் எண்ணங்கள் துறுதுறுவென ஓட ஆரம்பித்தன. இந்தக் கோடாரியைக் கொண்டு எதையெல்லாம் வெட்டலாம், எதையெல்லாம் இரண்டாகப் பிளக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தார்.

தோட்டத்தில் கோடாரியுடன் வலம் வந்த ஜார்ஜ், அங்கே இருந்த சிறிய செர்ரி மரம் ஒன்றின்மீது கோடாரியைப் பாய்ச்சினார். கோடாரி நன்றாக வெட்டவே, மரத்தை வெட்டி வீழ்த்தினார். அதற்குப்பிறகுதான் ஜார்ஜுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. ‘அய்யோ! இது தந்தை ஆசையாக வளர்க்கும் மரமாயிற்றே. இதை நான் வெட்டியது தெரிந்தால் என்னை அடி பின்னி விடுவாரே!’

ஜார்ஜ் பயந்ததுபோலவே அவரது தந்தை வீழ்ந்து கிடந்த தனது ஆசை மரத்தைப் பார்த்துவிட்டார். திகைத்து நின்றார். ‘யார் இதை வெட்டியது?’ என்று ஜார்ஜிடம் கோபமாகக் கேட்டார். ஒரு கணம் பயந்து நடுங்கிய ஜார்ஜ்,

பின் தைரியமாக, ‘என்னால் பொய் சொல்ல முடியாது. நான்தான் கோடாரியால் இதை வெட்டினேன்’ என்றார்.

தந்தை அடிப்பாரோ என்று ஜார்ஜ் பயந்து நிற்க, ‘உண்மையை ஒப்புக்கொண்ட உன் நேர்மையை நான் பாராட்டுகிறேன்’ என்று தந்தை தன் மகனை அணைத்துக் கொண்டார்.

ஜார்ஜ் வாஷிங்டன், சிறு வயதிலேயே அவ்வளவு நேர்மையானவராக இருந்தார் என்று உணர்த்தும் இந்தச் சம்பவம் கி.பி. 1880-ம் ஆண்டு வெளியான புத்தகம் ஒன்றில் இடம்பெற்றது. Life of George Washington என்ற அந்தப் புத்தகத்தை எழுதியவர் பார்ஸன் வீம்ஸ். ஜார்ஜ் வாஷிங்டன் இறந்துபோய் ஓராண்டு கழித்து வெளியான அந்தப் புத்தகம் நல்ல வரவேற்பைப் பெற்றது.

சில ஆண்டுகள் கழித்து வீம்ஸ் ஓர் உண்மையைச் சொன்னார். ‘தலைவர்களைப் பற்றி புத்தகம் எழுதும்போது அவர்களை நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக, வீரமானவர்களாகக் காட்டுவதற்கு என்று சில கற்பனைக் கதைகளைச் சேர்ப்பது உண்டு’ என்றார். அதாவது ஆறு வயது ஜார்ஜின் கோடாரி சாகசமும், பொய் சொல்ல முடியாது என்பதும் கற்பனையே என்றார்.

இதிலிருந்து நமக்குச் சில விஷயங்கள் புரிகின்றன. ஜார்ஜ் வாஷிங்டன் பொய் சொல்ல மாட்டார் என்பது வீம்ஸ் கூறியது பொய். வீம்ஸ், தான் சொன்ன பொய்யை ஒப்புக்கொள்ளும் நேர்மையானவர் என்பது உண்மை.

அமெரிக்காவின் ஆரம்பப்பள்ளி பாடத்திட்டத்தில் ஜார்ஜ் வாஷிங்டனின் கோடாரிக் கதை இடம்பெற்றது. அதைப் படித்த பலரும் உண்மைக்கதை என்றே நம்பியதும் உண்மை.

## பேயின் இனிப்பு!

Asafoetida என்றால் பெருங்காயம். aza என்பது பழைய பாரசீக வார்த்தை. இதற்கு பிசின் என்று அர்த்தம். foetida

என்பது லத்தீன் வார்த்தை. இதுக்கு ‘வாசனையுள்ள அல்லது கந்தக நெடியுள்ள’ என்று பொருள். இந்த இரு வார்த்தைகள் சேர்ந்துதான் ‘வாசனையுள்ள பிசின்’ என்னும் பொருளில் Asafoetida என்ற ஆங்கில வார்த்தை உருவானது.

மத்திய தரைக்கடல் நாடுகளே பெருங்காயச் செடியின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது. பெருங்காயச் செடியின் வேர்ப்பகுதியில் சுரக்கும் ஒரு பிசின்தான் நாம் சமையலில் பயன்படுத்தும் பெருங்காயம். இதன் சகிக்க முடியாத நெடியைப் பார்த்து பல்வேறு தேச மக்களும் இதை வெவ்வேறு விரும்பத்தகாத பெயர்களில் அழைத்திருக்கிறார்கள். அன்றைய பிரெஞ்சு மக்கள், merde du Diable என்று பெருங்காயத்தைச் சொன்னார்கள். அதற்கு ‘சாத்தானின் சாணம்’ என்று அர்த்தம். கிட்டத்தட்ட அதே பொருளில் ஜெர்மானியர்கள் இதை Teufelsdreck என்று அழைத்தார்கள். ஆங்கிலேயர்கள் Devil's Dung என்றார்கள். துருக்கியர்கள் ஒருபடி மேலே போய், ‘பேயின் இனிப்பு’ என்று சொன்னார்கள்.

உலகின் சில பகுதி மக்கள் மட்டும் இதை ‘கடவுளின் உணவு’ என்று அழைத்தார்கள். பல நோய்களைக் குணமாக்கும் சக்தி பெருங்காயத்துக்கு உண்டு என்பதால் இந்தப் புகழ் அதற்குக் கிடைத்தது. தமிழில் ‘பெரும்’ என்றால் பெரிய அல்லது நீண்ட என்று அர்த்தம். காயம் என்றால் உடம்பு. அதாவது உடலுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும் மருந்துப் பொருள் இது என்பதால் ‘பெருங்காயம்’ ஆனது.

அந்தக் காலத்தில் அரேபியர்கள் பயணங்கள் கிளம்புவதற்கு முன்பாக மறக்காமல் ஒரு விஷயத்தைச் செய்தார்கள். தங்கள் கால்களிலும் காலணிகளிலும் பெருங்காயத்தைத் தேய்த்துக் கொண்டார்கள். பெருங்காயத்தின் நெடி தாங்காமல் பாம்புகளோ, வேறு விஷ ஜந்துக்களோ அவர்களை நெருங்கி வராது என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

## ஒலிம்பிக் போட்டிக்கு லீவு போட்ட வீரர்!

1896-ம் ஆண்டில் உலகின் முதல் நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஏதென்ஸ் நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பான்ஏதெனிக் என்ற விளையாட்டரங்கம், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, முதல் நவீன ஒலிம்பிக்குக்காக மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. கிரீஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பல்கேரியா, சிலி, டென்மார்க், இத்தாலி, ஸ்வீடன், பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா ஆகிய 14 நாடுகள் முதல் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டன. ஆசியாவிலிருந்து எந்த நாடும் இடம்பெறவில்லை.

அமெரிக்க வீரரான ராபர்ட் காரெட் என்பவர், குண்டு எறிதலில் பயிற்சி பெற்றவர். ‘கிரீஸ் ஒலிம்பிக்ஸ்ல வட்டு எறியுற போட்டி இருக்குது. குண்டுக்கு பதிலா வட்டு. அவ்வளவுதான். நீ வேணா போய்ப்பாரு’ என்று ஒருவர் ஆலோசனை சொன்னார். ராபர்ட் தனக்குத் தெரிந்த கொல்லரிடம் வட்டு ஒன்றை செய்யச் சொன்னார். அவர் அளவு தெரியாமல் செய்து கொடுத்த வட்டு 14 கிலோ இருந்தது. ‘இவ்வளவு கனமெல்லாம் எறிய முடியாது. உருட்டித்தான் விடணும். வட்டே எறிய வேண்டாம்!’ என்று பின்வாங்கினார் ராபர்ட்.

ஏதென்ஸில் ஒலிம்பிக்கில் பயன்படுத்தப்படும் வட்டு சுமார் இரண்டே கால் கிலோதான் இருக்கும் என்ற உண்மை தெரிந்தபின், பெட்டியை எடுத்துக் கொண்டு சந்தோஷமாகக் கிளம்பினார் ராபர்ட். வட்டு எறிதல் - கிரீஸின் பாரம்பரிய விளையாட்டு. கிரீஸ் வீரரும் வட்டு எறிதலில் கில்லியுமான பனோஜியோடிஸ் என்பவர், ஸ்டைலாக வட்டு எறிய மைதானம் அதிர்ந்தது. ‘ஓ, இப்படித்தான் எறிய வேண்டுமா’ என்று அவரைப் பார்த்துக் கற்றுக் கொண்டு ராபர்ட் களமிறங்கினார். அவர் எறிந்த வட்டு பார்வையாளர்கள் மத்தியில் சென்று விழ, மைதானத்தில் சிரிப்பொலி. தனக்கான அடுத்த வாய்ப்பில் மூச்சைப்பிடித்து, முக்கி முனகி முழு மூச்சுடன் வட்டை

எறிந்தார். 29.15 மீ சென்று விழுந்தது. மைதானமே மூர்ச்சையானது. ஆம், ராபர்ட்டுக்கே முதலிடம். தவிர, குண்டு எறிதலிலும் முதலிடம் பிடித்தார்.

1900-ம் ஆண்டில் பாரிஸில் நடந்த இரண்டாவது ஒலிம்பிக் போட்டிக்கும் ராபர்ட், வட்டையும் குண்டையும் தூக்கிக் கொண்டு போனார். வட்டு எறிதலில் ஏதென்ஸில் கைகொடுத்த அதிர்ஷ்டம், பாரிஸில் கைவிட்டது. முறையான பயிற்சி இன்றி எறிந்ததால் காற்றில் வட்டு சகல திசைகளிலும் பறந்தது. சிலமுறை மரங்களில் மோதி விழுந்தது. ராபர்ட் தகுதி இழந்தார்.

அதேசமயம், குண்டு எறிதலில் சுலபமாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். ஆனால், இறுதிப் போட்டியில் அவர் கலந்து கொள்ளவில்லை. காரணம், இறுதிப்போட்டி ஞாயிறு அன்று நடைபெற்றது.

'அடப்போங்கய்யா! சன்டே எனக்கு ஹாலிடே!' என்று ஹாயாக இருந்துவிட்டார் ராபர்ட் காரெட்.

**திருடப்பட்ட மூளை!**

சென்ற நூற்றாண்டின் சிறந்த மனிதர் என்று டைம் இதழால் வருணிக்கப்பட்ட உலகப்புகழ் அறிவாளி, ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் மூளை எப்படி இருக்கும் என்று அவர் வாழ்ந்தபோதே பலருக்கும் கேள்வி இருந்தது. அவரது மூளையைத் தனியாகக் கழற்றிப் பார்த்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று பலரும் விரும்பினர்.

'நான் இறந்துபோனால் எனது உடலை எந்தவித ஆய்வுக்கும் உட்படுத்தக்கூடாது. அதைப் போற்றிப் பாதுகாக்கக்கூடாது. எனக்கு நினைவிடங்கள் எல்லாம் கட்டப்படக்கூடாது. எனவே என் உடலை எரித்து சாம்பலை ரகசியமாக எங்காவது தூவிவிடுங்கள்' என்று ஐன்ஸ்டீன் தனது குடும்பத்தினரிடம் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்காவின் நியுஜெர்ஸியில் இருக்கும் பிரின்ஸ்டைன் மருத்துவமனையில் 1955-ம் ஆண்டில் ஐன்ஸ்டீன் உடல்நலக்குறைவு காரணமாக

அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைகள் பலனின்றி, அந்த ஏப்ரல் 18 அன்று இறந்துபோனார். ஐன்ஸ்டீனின் உடலைக் கூறாய்வு செய்த மருத்துவரான தாமஸ் ஹார்வி, ரகசியமாக அவரது மூளையைத் திருடி ஒரு பாட்டிலில் போட்டுக் கொண்டார். மருத்துவமனை நிர்வாகத்தினர், உடலைப் பத்திரமாக ஐன்ஸ்டீனின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர்.

ஐன்ஸ்டீனுக்குரிய இறுதி மரியாதைகள் அவரது விருப்பப்படியே நிறைவேற்றப்பட்டன. ஆனால், சில தினங்களிலேயே ஐன்ஸ்டீனின் இறந்த உடலிலிருந்து அவரது மூளை திருடப்பட்ட விஷயம் வெளியே கசிந்தது. உடனே தாமஸ் ஹார்வி, 'ஐன்ஸ்டீனின் மூளையை ஆராய்ந்து பார்த்தால் இன்னும் பல விஷயங்கள் உலகத்துக்குத் தெரிய வரும். அதற்கு அனுமதிக்க வேண்டும் என்று அவரது குடும்பத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று வேண்டுகோள் வைத்தார்.

அதற்கு ஐன்ஸ்டீனின் மகனான ஹான்ஸ் அல்பர்ட் அரைமனத்துடன் சம்மதித்தார். அதேசமயம் பிரின்ஸ்டன் மருத்துவமனை நிர்வாகம், தாமஸ் ஹார்வியின் வேலையைப் பறித்தது. ஐன்ஸ்டீனின் மூளையுடன் பிலடெல்பியாவுக்கு நகர்ந்தார் தாமஸ்.

சுமார் 25 வருடங்களுக்குப் பிறகே ஐன்ஸ்டீனின் மூளை ஆராய்ச்சி குறித்த தனது முதல் ஆய்வுக் கட்டுரையை தாமஸ் வெளியிட்டார். அதன் பிறகு பிறரும் ஆராய்ச்சி செய்யும் வகையில் அந்த மூளையின் பகுதிகளைப் பலருக்கும் பிரித்துக் கொடுத்தார். அதில் பல பகுதிகள் காணாமலேயே போய்விட்டன.

சரி, ஐன்ஸ்டீன் மூளையை ஆராய்ந்து என்ன கண்டுபிடித்திருக்கிறார்கள்?

சராசரி மனிதர்களின் மூளையைவிட, ஐன்ஸ்டீனின் மூளையில் மடிப்புகள் அதிகம் காணப்படுகின்றன. Prefrontal Cortex எனப்படும் மூளையின் முன்பகுதி, அதாவது எந்தவொரு விஷயத்தையும் நுணுக்கமாக ஆராயும் பகுதி ஐன்ஸ்டீனுக்குப் பெரியதாகவே

இருந்துள்ளது. சாதாரண மூளையின் பக்க மடிப்பு (சில்வியன் பிளவு) கொஞ்சம் நெருக்கமாகவே இருக்கும். ஆனால், ஐன்ஸ்டீனின் மூளையில் அது துண்டிக்கப்பட்டது போல் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இன்று வரையில் ஐன்ஸ்டீன் மூளை குறித்த ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஐன்ஸ்டீன் மூளையின் சில பாகங்கள், பிலடெல்பியாவின் மட்டர் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

சரி, 25 வருடங்களுக்கும் மேல் தாமஸ், ஐன்ஸ்டீனின் மூளையை எங்கே பாதுகாத்து வைத்திருந்தார்? அதை என்ன செய்தார்?

அந்த மூளையைப் பல பாகங்களாகப் பிரித்த தாமஸ், இரண்டு ஜார்களில் அவற்றைப் போட்டு செலாய்டின் திரவத்தால் நிரப்பினார். தனக்கு ஓய்வு கிடைத்தால் அல்லது எப்போதாவது தோன்றினால் மட்டுமே ஆய்வு செய்தார்.

வருடங்கள் ஓடின. ‘இந்த பாட்டில்ல கிடக்குற மூளையைத் தூக்கி தூர எறியுங்க. இடத்தை அடைக்குது’ என்று தாமஸின் மனைவி அடிக்கடி அவரிடம் சண்டையிட்டார். எனவே அந்த பாட்டில்களை தான் அப்போது பணியாற்றிய ஆய்வுக்கூடத்துக்கு எடுத்துச் சென்றார். அங்கே அட்டைப் பெட்டி ஒன்றில் அந்த பாட்டில்களை வைத்தார். ஃபிரிட்ஜுக்குள் அட்டைப் பெட்டியை வைத்தார். பல ஆண்டுகள் அந்த அட்டைப் பெட்டிகள் மதுபாட்டில்களுடன் சும்மா கிடந்தன.

**ஐன்ஸ்டீனின் இறுதி வார்த்தைகள்!**

ஐன்ஸ்டீனின் பல்வேறு வார்த்தைகள், தத்துவங்கள், சமன்பாடுகள் என்றென்றைக்கும் அழியாதவை. அப்பேர்ப்பட்ட மனிதர் உச்சரித்த இறுதி வார்த்தைகள் என்ன தெரியுமா?

1955, ஏப்ரல் 18. அதிகாலை மணி 1.15. நியு ஜெர்ஸியின் பிரின்ஸ்டைன் மருத்துவமனையில் படுத்த படுக்கையாகக் கிடந்த ஐன்ஸ்டீன், இழுத்து மூச்சுவிட்டார். அங்கே பணியில் இருந்த நர்ஸ், ஐன்ஸ்டீனை நோக்கிச் சென்றார்.

அந்த மாபெரும் விஞ்ஞானி, முனகலாகச் சில வார்த்தைகளை உச்சரித்தார். மீண்டும் இரண்டு முறை இழுத்து மூச்சுவிட்டார். பிறகு அவரது கண்கள் நிலைகுத்தி நின்றன. ஐன்ஸ்டீனின் உயிர் பிரிந்திருந்தது.

அப்போது அந்த நர்ஸ் மட்டுமே அங்கே இருந்தார். ‘இறப்பதற்கு முன் ஐன்ஸ்டீன் ஏதாவது சொன்னாரா?’ என்று நர்ஸிடம் விசாரித்தார்கள்.

‘ஆம், சொன்னார்.’

‘என்ன சொன்னார்?’

‘ஜெர்மன் மொழியில் ஏதோ முனகினார்.’

‘அப்படியா? என்ன அது?’

‘மன்னிக்கவும். எனக்கு ஜெர்மன் தெரியாது.’

## சோப்புக்கட்டி சாக்லேட்

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் அமெரிக்க வீரர்களுக்கு ஆயுதங்கள், உடை, உணவுடன் Hershey என்ற நிறுவனம் தயாரித்த சிறப்பு சாக்லேட் கட்டிகளும் கொடுக்கப்பட்டன. அந்த சாக்லேட்டில் என்ன சிறப்பு?

அந்த சாக்லேட்களை வாயில் போட்டால் கரையாது. அதில் சேர்க்கப்பட்டிருந்த சர்க்கரையின் அளவு மிகவும் குறைவு. மறந்துபோய் வேகமாகக் கடித்துவிட்டால் பற்கள் உடைய வாய்ப்பு உண்டு. சாக்லேட்டை கைகளால் உடைத்துச் சாப்பிடுவதுகூட கடினம்தான். இப்படியாக நாற்பது மில்லியன் சாக்லேட் பார்களை Hershey நிறுவனம் அந்தச் சமயத்தில் தயாரித்தது.

நிறுவனத்தில் ஊழியர்கள், வாரத்தில் ஏழு நாள்களும் வேலை பார்த்து இந்தக் கடினமான சாக்லேட் கட்டிகளை கஷ்டப்பட்டுத் தயாரித்தார்கள். யுத்தக் களத்தில் வீரர்களுக்கு சக்தியும் உற்சாகமும் கொடுப்பதற்காகவே இந்த வகை கடினமான சாக்லேட் கட்டிகளைத் தயாரித்ததாக Hershey நிறுவனம் கூறியது. வேறு எந்த உணவுப்பொருளும் கையில் இல்லாத நிலையில் இந்த சாக்லேட் பார்கள் பசியைப் போக்கும் என்று சொல்லித்தான் வீரர்களுக்குக் கொடுத்தார்கள்.

அமெரிக்க வீரர்களுக்கு இந்த கல் போன்ற சாக்லேட் பார்கள் பிடிக்கவே இல்லை. வேண்டா வெறுப்பாகத்தான் சாப்பிட்டார்கள். சிலர் அதைக் கையில் வாங்கவே இல்லை. சிலர் எதிரிகளைத் தாக்கும் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கிண்டலாகச் சொல்லிக் கொண்டார்கள். வேறு சிலர், அந்தக் கடினமான சாக்லேட் பார்களை, சோப்புக்கட்டிகளாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

### இங்கிலாந்துக்குப் போன யானை!

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தின் அரசராக இருந்தவர் மூன்றாம் ஹென்றி. ஐரோப்பியக் கண்டத்திலேயே வலிமையான அரசர் அவர் என்பதால் அவருக்கு பல ராஜ்ஜிய மன்னர்களும் வித்தியாசமான பரிசுகளை அனுப்பி வைத்தது உண்டு. புனித ரோம் சாம்ராஜ்ஜியத்தின் மன்னரான இரண்டாம் ஃபிரடெரிக், ஹென்றிக்கு ஒட்டகம் ஒன்றைப் பரிசாக அனுப்பினார். அப்போதைய நார்வே மன்னராக இருந்தவர் பனிக்கரடி ஒன்றை அனுப்பியதாகவும் சொல்லப்படுவதுண்டு.

பிரான்ஸின் மன்னரான ஒன்பதாம் லூயிஸ், மூன்றாம் ஹென்றியை அசத்த வேண்டும் என்பதற்காகவே யானை ஒன்றைப் பரிசாக அனுப்பி வைத்தார். அப்போது வாழ்ந்த இங்கிலாந்து மக்கள் யாருமே யானையை நேரடியாகப் பார்த்ததே கிடையாது. ராஜ்ஜியத்துக்கு வந்த யானையை

லண்டன் கோபுரம் என்றழைக்கப்படும் கோட்டைக்குள் கொண்டு செல்வதற்குள்ளாகவே அவர்களுக்கு விழி பிதுங்கிவிட்டது. அதுவும் தேம்ஸ் நதியைக் கடக்க வைத்து மன்னரிடம் அழைத்துச் செல்வதற்குள் லண்டன் நகர நிர்வாகி (ஷெரிப்) ஆடிப்போய்விட்டார்.

மன்னர் ஹென்றி, யானையைக் கண்டு உற்சாகமானார். தனக்கான கௌரவத்தை அதிகரிக்கும் பரிசு என்று மகிழ்ந்தார். லண்டன் கோட்டையில் யானைக்கென்று தனியாக ஒரு வீடு கட்ட உத்தரவிட்டார். 40 அடி அகலத்தில், 20 அடி உயரத்தில் யானைக்கான வசிப்பிடம் கட்டப்பட்டது. அங்கே யானை பராமரிக்கப்பட்டது. தினமும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து யானையை வியப்புடன் வேடிக்கை பார்த்துவிட்டுச் சென்றனர்.

அந்த யானைக்கு வைக்கப்பட்ட பெயர் Henry te Flor என்று அப்போது வாழ்ந்த வரலாற்றாளரான மேத்யூ பாரிஸ் என்பவர் தனது குறிப்புகளில் எழுதி வைத்துள்ளார். அந்த யானை எப்படி இருந்தது என்று வருணித்துள்ள மேத்யூ, அதன் ஓவியம் ஒன்றையும் வரைந்துள்ளார். முதன் முதலில் யானையைப் பார்த்த ஒருவர் வரைந்த ஓவியம் என்பதால், அது கிட்டத்தட்ட யானை போன்றே இருக்கும் ஓவியம் எனலாம். இங்கிலாந்துக்கு வந்த முதல் யானை இதுதான் என்று மேத்யூ குறிப்பிட்டுள்ளார்.

1255-ம் ஆண்டில் இங்கிலாந்துக்குக் கொண்டு வரப்பட்ட அந்த யானை, 1257-ம் ஆண்டிலேயே இறந்து போனது. முதல் காரணம், இங்கிலாந்து நாட்டின் அதிகக் குளிராக இருக்கலாம். இரண்டாவது காரணம், அவர்களுக்கு ஒரு யானையை எப்படிப் பராமரிக்க வேண்டும் என்று புரியவில்லை. யானை சைவமா, அசைவமா என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. அதற்கு இறைச்சியும், தரமான ரெட் ஒயினும் தினமும் கொடுக்கப்பட்டதாக மேத்யூ குறிப்பிட்டுள்ளார்.

யானை இறைச்சி சாப்பிட்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால், சிவப்பு ஒயினை கணக்கு வழக்கின்றிக் குடித்ததே யானை

சீக்கிரம் இறந்து போகக் காரணம் என்கிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு.

பாவம், Liquor Drinking is injurious to health என்று அதற்கு யாரும் சொல்லவில்லைபோல!

**இது அல்லவோ தேர்தல்!**

மேற்கு ஆப்பிரிக்க நாடான லைபீரியாவில், 1927-ம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றது. அதிபருக்கான தேர்தலில் ஆளும் கட்சியாக இருந்த ட்ரூ விக் பார்ட்டியின் சார்லஸ் கிங் போட்டியிட்டார். ஏற்கெனவே இரண்டு முறை அதிபராக இருந்த அவர், மூன்றாவது முறையும் வெற்றி பெறும் முனைப்புடன் தேர்தல் களத்தில் செயலாற்றினார்.

சார்லஸ் கிங்குக்கு எதிராகப் போட்டியிட்டவர் தாமஸ் பௌல்க்னெர். அவர் பீப்புள் பார்ட்டியைச் சேர்ந்தவர். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மீண்டும் சார்லஸ் கிங் லைபீரியாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார். அவர் வாங்கிய வாக்குகளை அறிவித்தபோதுதான் லைபீரிய மக்களுக்குத் தலைசுற்றியது.

லைபீரியாவின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 15000. உண்மையில் பதிவான வாக்குகளும் 15000-க்கும் கீழ்தான். எதிர்க்கட்சி வேட்பாளரான தாமஸ் வாங்கிய வாக்குகளின் எண்ணிக்கை 9000. எனில், தாமஸ்தானே ஜெயித்தவர். மீதி 6000-க்கும் குறைவான வாக்குகளை வாங்கிய சார்லஸ் கிங்கை எப்படி வென்றவராக அறிவிக்க முடியும்?

முடியும். ஏனென்றால் சார்லஸ் கிங் வாங்கிய வாக்குகளாக அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை 2,43,000. ஆம், இரண்டு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரம். மொத்தம் பதிவான வாக்குகளாக அறிவிக்கப்பட்டவை தாமஸ் வாங்கிய ஒன்பதாயிரத்தையும் சேர்த்து 2,52,000. ஆகவே,

96.43% வாக்குகள் பெற்ற சார்லஸ் கிங், மூன்றாவது முறையாக லைபீரியாவின் அதிபர் ஆனார்.

உலக வரலாற்றில் மிகவும் மோசடியாக நடத்தப்பட்ட தேர்தல் இது என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

**வீட்டு வாடகை வெங்காயம்**

அந்தக் காலத்தில் கிரேக்கர்கள் வெங்காயத்தை அள்ளி அள்ளிச் சாப்பிட்டிருக்கிறார்கள். வாய் நாற்றம் அடிக்கும் என்றெல்லாம் கவலைப்படவே இல்லை. காரணம், கிரேக்கர்களுக்கு விளையாட்டின் மீது பாசம் அதிகம். வெறி என்றும் சொல்லலாம். தப்பில்லை. விளையாட்டில் ஜெயிக்க வேண்டும் என்றால் உடலில் ரத்தம் அதிகம் வேண்டும். அதிக ரத்தத்தைக் கொடுக்கும் சக்தி வெங்காயத்துக்கு உண்டு என்பது அவர்களது நம்பிக்கையாக இருந்தது.

அதேபோல அன்றைய ரோமானிய வீரர்கள், போர்க்களத்துக்குச் செல்லும்முன் தங்களது உடம்பில் வெங்காயத்தை வெட்டி தடவிக் கொண்டார்கள். வெங்காய மணம் என்பது தனி பலத்தைக் கொடுக்கும் என்பது ரோமானிய கிளேடியேட்டர்களின் நம்பிக்கையாக இருந்தது.

ரோமின் ஏழை மக்களின் தினசரி உணவில் வெங்காயம் இருந்தது. ஏனென்றால் அவர்களுக்கு பேய் மீதான பயம் அதிகம். வெங்காயத்தை அதிகம் சாப்பிட்டால் பேயோ, கெட்ட ஆவிகளோ மூக்கைப் பொத்திக் கொண்டு ஓடிவிடும், கிட்டவே வராது என்று நம்பினார்கள்.

‘இந்தாங்க ஒரு மூட்டை நிறைய வெங்காயம். இதை இந்த மாசம் வீட்டு வாடகையா வைச்சுக்கோங்க’ என்று கொடுத்தால், வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் மகிழ்வுடன் வாங்கிக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, இப்படியும் நடந்திருக்கிறது.

‘உன் சிநேகிதனுக்குக் கல்யாணமாமே. என்ன பரிசு கொடுத்த நீ?’

‘ஒரு பெட்டி நிறைய வெங்காயம் கொடுத்தேன். சந்தோஷமா கட்டி அணைச்சுக்கிட்டான்.’

அன்றைய ரோமில் வெங்காயம் மிகப்பெரிய கௌரவப்பரிசாகவே பார்க்கப்பட்டது. எனவே, ‘போடா வெங்காயம்!’ என்று யாரும் திட்டினால் இனி சங்கடப்பட வேண்டாம். சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

**ரின் டின் டின்!**

1918. முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சமயம். அமெரிக்க ராணுவ வீரரான லீ டன்கன், பிரான்ஸின் ஃப்ளரே என்ற கிராமத்தின் அருகில், போர்ப்பணிகளில் ஈடுபட்டிருந்தார். அங்கே ஜெர்மானிய விமானப்படைகள் குண்டுகள் வீசிச் சென்றதால் பல இடங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அப்போது, நாய்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பட்டி ஒன்று சேதமடைந்திருப்பதைக் கண்டார். ஓடிச் சென்று பார்த்தார். ஜெர்மன் ஷெப்பர்ட் நாய் ஒன்றும், அதன் ஐந்து குட்டிகளும் அங்கே கிடந்தன. அவற்றை மீட்டு, தன் ராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றார். தாயும், மூன்று குட்டிகளும் சில நாள்களில் இறந்து போயின.

குண்டு வீச்சிலும் தப்பிப் பிழைத்த அதிர்ஷ்ட நாய்கள் என்று ஆண் குட்டி ஒன்றையும், பெண் குட்டி ஒன்றையும் லீ டன்கன் வளர்க்க ஆரம்பித்தார். அவற்றுக்கு அவர் வைத்த பெயர் ரின் டின் டின் & நானெட். 1919-ல் முதல் உலகப்போர் முடிந்து அமெரிக்காவின் நியு யார்க் நகரத்துக்குத் திரும்பினார் லீ டன்கன். நாய்களையும் தன்னுடன் எடுத்து வந்தார். நானெட் சில காலத்தில் இறந்து போனது. மீதமிருந்த ரின் டின் டின், லீ டன்கனின் அதிர்ஷ்ட நாயாக வளர்ந்தது.

ஜெர்மன் ஷெப்பர்ட் நாய்கள் அதிகம் அறிவுள்ளவை என்று கேள்விப்பட்ட லீ டன்கன், ரின் டின் டின்னுக்கு முறைப்படி

எல்லா பயிற்சிகளையும் கொடுத்தார். Dog Show-க்களில் ரின் டின் டின் பங்குகொள்ள ஆரம்பித்தது. ஒருமுறை ஷோ ஒன்றில் ரின் டின் டின் சுமார் 12 அடி உயரத்துக்குத் தாவிக் குதித்தது. அதை லீ டன்கனின் நண்பரான சார்லி ஜோன்ஸ் என்பவர் தனது கேமராவில் படமாக்கினார். அதற்கு ரின் டின் டின்னுக்குக் கிடைத்த சம்பளம் 350 அமெரிக்க டாலர்கள்.

அந்தக் காட்சிப் படம் புகழ்பெறவும், ரின் டின் டின் ஹாலிவுட் சினிமாக்களில் நடிக்கத் தொடங்கியது. அது நடித்த முதல் படம், The Man from Hell's River (1922). அதில் நடிக்க வேண்டிய ஓநாயை ஒழுங்காக வேலை வாங்க முடியவில்லை என்பதால், பதிலாக நாயான ரின் டின் டின்னை நடிக்க வைத்தார்கள். ஆம், ஓநாய் வேடத்தில் நாய். அந்தப் படத்தில் மட்டுமல்ல. அதற்குப் பிறகும் சில படங்களில் ரின் டின் டின் ஓநாயாக நடித்தது.

அதன் புகழ் வளர்ந்து கொண்டே சென்றது. பிறகு ரின் டின் டின்னை மையக் கதாபாத்திரமாகக் கொண்ட படங்கள் உருவாக்கப்பட்டன. எல்லாமே வசனம் எதுவும் இல்லாத ஊமைப் படங்களே. சூப்பர் ஸ்டார் நாயாக ஹாலிவுட்டை ஆண்டது ரின் டின் டின். சுமார் 26 படங்களில் நடித்த ரின் டின் டின்னின் ஒரு வாரச் சம்பளம் என்பது 6000 அமெரிக்க டாலர்களாக இருந்தது.

வாரம் ஒன்றுக்கு சுமார் 10000 கடிதங்கள் ரின் டின் டின்னுக்கு வந்தன. எல்லாமே ரசிகர்களின் கடிதங்கள். எதற்கு எழுதினார்கள் என்று தெரியவில்லை. சூப்பர் ஸ்டார் ரின் டின் டின், எதற்கும் பதில் அளித்திருக்கவும் வாய்ப்பு இல்லை.

ரின் டின் டின்னுக்கென தனி பங்களா. அதற்கென தனி செ ஃப். அதைப் பராமரிக்க தனி வேலையாள்கள். அது சாப்பிடும்போதெல்லாம் இசையும் ஒலிக்க விட்டு அதை குஷிப்படுத்தினார்கள். எப்போதும் சொகுசு காரில் மட்டும் பயணம். ஹாலிவுட்டின் பிரபல தயாரிப்பாளர்களான வார்னர் பிரதர்ஸ், அப்போது பெரும் கடனில் சிக்கித் தவித்தார்கள். ரின் டின் டின்னை வைத்து படங்கள் எடுத்து

ஜெயித்தே வார்னர் பிரதர்ஸ் செழிப்பாக நிமிர்ந்து நின்றார்கள் என்பது வரலாறு.

ரின் டின் டின் அடைந்த புகழுக்குப் பிறகு, பலரும் ஜெர்மன் ஷெப்பர்ட் நாய்களை வாங்கி வளர்ப்பதில் விருப்பம் கொண்டனர். 1932-ல் ரின் டின் டின் தனது 14-வது வயதில் இறந்து போனது. இதுவரை உலகில் பிறந்த ஜெர்மன் ஷெப்பர்ட் நாய்களில் ரின் டின் டின் அளவுக்கு எதுவுமே புகழ்பெறவில்லை என்பதும் உண்மை.

கூடுதலாக இரண்டு செய்திகள்.

ரின் டின் டின் புகழின் உச்சத்தில் இருந்த 1929-ம் ஆண்டுதான் முதல் முதலாக ஆஸ்கர் விருது வழங்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அப்போது சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதுக்கான ஓட்டெடுப்பில் ரின் டின் டின்தான் முதலிடத்தில் வந்தது என்றும், மனிதர்களுக்கு வழங்காமல் நாய்க்கு வழங்கினால் சர்ச்சை உண்டாகும் என்பதால் அதைத் தவிர்த்தார்கள் என்று செய்தி உண்டு.

ரின் டின் டின்னின் வழி வந்த வாரிசுகள் என்று ரின் டின் டின் ஜூனியர், இரண்டாம் ரின் டின் டின், மூன்றாம் ரின் டின் டின் என்று பிற்காலத்தில் ஹாலிவுட் திரைப்படங்களில் வேறு ஜெர்மன் ஷெப்பர்ட் நாய்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உண்மையில் அவை ரின் டின் டின்னுத்தான் பிறந்தவை என்பதற்கு ஆதாரம் கிடையாது. அவை எதுவும் ரின் டின் டின் அளவுக்கு நட்சத்திரமாகப் புகழ் பெறவில்லை.

## ரயில்வே ஸ்டேஷன் பேய்!

மேற்கு வங்கத்தில் புருலியா மாவட்டத்தில் பேகுன்கோடொர் ரயில்வே நிலையம் அமைந்திருக்கிறது. பேகுன்கோடொர் என்பது மிகச்சிறிய ஊர்தான். வயல்வெளிகளுக்கு இடையில் அமைக்கப்பட்ட, அதிகம் கூட்டம் இல்லாத ரயில் நிலையம் அது. சந்தால் என்ற பழங்குடி மக்களின் தலைவியாக இருந்த லச்சன்

குமாரியின் முயற்சியால் இந்த ரயில் நிலையம் 1960-ம் ஆண்டில் கட்டப்பட்டது.

1967-ல் அங்கே ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் வேலை பார்த்தார். டிக்கெட் கொடுப்பது முதல் நிலையத்தைப் பராமரிப்பது வரை எல்லாம் அவரது வேலைதான். ஒருநாள் இரவில் வெள்ளைச் சேலை கட்டிய பெண் ஒருத்தி ரயில் தண்டவாளத்தின் நடுவில் நடந்து செல்வதைக் கண்டார். வெலவெலத்துப் போனார். அடுத்த சில நாள்களும் அவரது கண்கள் வெள்ளைச் சேலை பெண் பேய் (ஆமாம், பேய்களுக்கெல்லாம் வேறு நிறத்தில் சேலைகளே கிடைக்காதா?) தென்பட்டது.

ஊர்க்காரர்களிடம் தான் கண்ட காட்சிகளை அச்சத்துடன் விவரித்தார் ஸ்டேஷன் மாஸ்டர். ‘கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு பொம்பளை ரயில்ல அடிபட்டுச் செத்துப் போனா. அவ ஆவிதான் இங்க திரியுதுபோல!’ என்று எரியும் பயத்தில் எண்ணெய் ஊற்றினார்கள் ஊர்க்காரர்கள்.

‘ஆளை விடுங்கடா சாமி!’ உடனே தன் வேலையை உதறிவிட்டு பேகுன்கோடொரை விட்டுக் குடும்பத்துடன் கிளம்பிச் சென்றார் ஸ்டேஷன் மாஸ்டர். ரயில்வே நிர்வாகம் அந்த ஸ்டேஷனை மூடியது. தனது கோப்புகளில் Haunted Railway Station என்று பேகுன்கோடொர் நிலையத்தைக் குறிப்பிட்டது. ரயில்கள் தடதடத்தபடி பேகுன்கோடொரை வேகமாகக் கடந்து சென்றன.

வெள்ளைச் சேலைப் பேயைப் பார்த்த அந்த ரயில்வே மாஸ்டர், தன் வீட்டில் குடும்பத்தினருடன் செத்துக் கிடந்தார் என்றும் ‘திகில் கதை’ சொல்லப்படுவதுண்டு. அந்த ஊரில் வேலை பார்க்கப் பிடிக்காத ஸ்டேஷன் மாஸ்டர்தான், இப்படிப் பேய்க்கதையைக் கிளப்பிவிட்டு டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு அங்கிருந்து தப்பித்தார் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

1990-களில் ஊர்க்காரர்கள் சிலர் மீண்டும் பேகுன்கோடொர் ஸ்டேஷனைத் திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கத் தொடங்கினர். ஆனால், ரயில்வே ஊழியர்கள்

பலரும் அங்கே சென்று பணியாற்றத் தயங்கினர். 2009-ல் மம்தா பானர்ஜி ரயில்வே அமைச்சராக இருந்தபோது பேகுன்கோடொர் ரயில்வே ஸ்டேஷன் மீண்டும் இயக்கச் சொல்லி உத்தரவிட்டார். அவரும் வெள்ளைச் சேலைப்பெண்தானே! ‘எனக்கு பேய் நம்பிக்கை எல்லாம் இல்லை’ என்று ஒரே போடாகப் போட்டார். பேகுன்கோடொரில் தினமும் பத்து ரயில்கள் வரை நின்று செல்லத் தொடங்கின.

இப்போது மாலை 5.45-க்கு பேகுன்கோடொரில் இறுதி ரயில் வந்து செல்கிறது. ஆறு மணிக்கு மேல் யாரும் ஸ்டேஷனில் இருப்பதில்லை. இரவெல்லாம் அந்த வெள்ளைச் சேலைப் பெண் தண்டவாளத்தில் ‘கேட் வாக்’ சென்று கொண்டிருப்பதாகத்தான் இன்னும் பலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெண்ணைத் தேடி வரும் சில குழுவினர், இரவில் பேகுன்கோடொர் ஸ்டேஷனில் தங்கவும் செய்கிறார்கள். ஆவி வந்ததாகத் தெரியவில்லை. தங்கியவர்களுக்குக் கொட்டாவிகள் வந்திருக்கலாம்!

## குழிக்குள் புதைந்த ரகசியம்!

முதல் உலகப்போர் சமயம் அது. அமெரிக்காவில் இருந்து பிரான்ஸுக்கு உதவி செய்வதற்காகச் சென்றிருந்த ஒரு படைப்பிரிவின் கர்னலாக ஜார்ஜ் பாட்டான் என்பவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். பிரான்ஸின் பௌர்க் என்ற கிராமத்துக்கு அருகில் சிறிய ரக ராணுவ டாங்கிகளுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்றையும் 1917-ம் ஆண்டில் அவர் அமைத்தார். சில காலம் அங்கே தங்கிப் பணியாற்றினார்.

அப்போது அந்த ஊரின் மேயராக இருந்தவர், பாட்டனைத் தேடி வந்தார். தேம்பித் தேம்பி அழுதார். ‘உங்கள் வீரர் ஒருவர் போரில் எங்களுக்காக இறந்து போயிருக்கிறார். நீங்கள் சொல்லவே இல்லையே!’ என்று சொல்லிவிட்டு மேலும் அழுதார். பாட்டான் புரியாமல் ‘என்ன சொல்கிறீர்கள்?’ என்று கேட்டார். ‘அதோ அங்கேதானே

அந்த வீரரைப் புதைத்திருக்கிறீர்கள்' என்று மேயர் சுட்டிக் காட்டினார்.

அந்த இடத்தைப் பார்த்ததும் பாட்டானுக்கு உள்ளுக்குள் சிரிப்பு வந்தது. இருந்தாலும் மேயரின் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்ற நினைப்பில் எதுவும் சொல்லவில்லை. அவரைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

உண்மை என்னவென்றால், பாட்டானின் படை வீரர்கள் யாருமே அப்போது போரில் சாகவில்லை. மேயர் காட்டிய அந்த இடத்தில், அமெரிக்க வீரர்கள் குழி ஒன்றை வெட்டி காலைக்கடன்களை கழித்து வந்தனர். பின்னர் அதை மூடிவிட்டனர். அந்த இடத்தில் Abandoned Rear (கைவிடப்பட்ட பகுதி) என்ற பொருளில் அடையாளப் பலகை ஒன்றை வைத்திருந்தனர். அது புரியாமல், அந்தப் பலகையானது சிலுவை வடியில் இருந்ததால், போரில் இறந்த யாரோ ஓர் அமெரிக்க வீரரைத்தான் அங்கே புதைத்திருக்கிறார்கள் என்று ஊர் மக்கள் நினைத்துவிட்டார்கள்.

ஜார்ஜ் பாட்டான், முதல் உலகப்போர் முடிந்த பிறகு அமெரிக்காவுக்குத் திரும்பினார். சுமார் 24 ஆண்டுகள் கழித்து மீண்டும் பிரான்ஸுக்கு வந்தார். அப்போது இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. மேஜராக ஒரு படையை வழி நடத்தி வந்த பாட்டான், பௌர்க் கிராமத்துக்கும் வந்தார். அப்போது அங்கே பிரெஞ்சுக்காரர் ஒருவரைக் கண்டார். 'நீங்கள் பிரான்ஸின் ராணுவ வீரர்தானே?' என்று கேட்டார்.

'ஆம், மிஸ்டர். ஜார்ஜ் பாட்டான். அப்போது நீங்கள் கர்னலாக இருந்தீர்கள்' என்றார் அந்த பிரெஞ்சு வீரர்.

பாட்டனை அழைத்துக் கொண்டு முதல் உலகப் போர் சமயத்தில் முகாம் அமைத்திருந்த இடங்கள், போரிட்ட இடங்கள், கைவிடப்பட்ட ராணுவ டாங்கி பள்ளி போன்றவற்றையெல்லாம் காண்பித்தார் அந்த பிரெஞ்சு வீரர். கூடவே ஒரு கல்லறையும் காண்பித்தார். 'Unknown Hero' என்ற அர்த்தத்தில் அங்கே ஒரு வீரருக்குக் கல்லறை

Knox e_Library

Click Here
Join Now

கட்டப்பட்டிருந்தது. அந்தக் கல்லறைக்கு ஊர் மக்கள் தகுந்த மரியாதை அளித்துக் கொண்டிருந்தனர். ஆம், அது அந்தக் கைவிடப்பட்ட கக்கா பகுதிதான்.

மக்களின் மனத்தைப் புண்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தில் அப்போதும் பாட்டான் உண்மையைச் சொல்லவில்லை. உண்மையைத் தன் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் நூலில் மட்டும் பதிவு செய்தார்.

**வரிக்குதிரை வண்டி!**

வரிக்குதிரை என்றழைக்கப்படும் Zebra, ஆப்பிரிக்கக் கண்டத்துக்குச் சொந்தமானது. குதிரைகள், கழுதைகள்போல இவையும் சமூக விலங்கே. எனில், அவற்றை மட்டுமே ஏன் சும்மா விட்டு வைத்திருக்க வேண்டும் என்று ஐரோப்பியன் யோசிக்க ஆரம்பித்தான். மனிதர்களைப்போல விலங்குகளையும் அடிமைப்படுத்தி வைக்கும் அவனது புத்தி அப்படி யோசிக்கத் தொடங்கியது.

பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஆப்பிரிக்கக் கண்டத்துக்குச் சென்ற பிரிட்டிஷாருக்கு அங்கும் இங்கும் பயணம் செய்யவும், வண்டிகளை இழுக்கவும், பொதி சுமக்கவும் குதிரைகள் தேவைப்பட்டன. ஐரோப்பியக் கண்டத்திலிருந்து கப்பலில் குதிரைகளைக் கொண்டு வரலாம்தான். ஆனால், ஆப்பிரிக்கக் கண்டத்தின் அதிக வெப்பநிலை, ஐரோப்பியக் குதிரைகளுக்கு ஒத்துவரவில்லை. அவை சீக்கிரமே நோய்வாய்ப்பட்டு இறந்துபோயின.

அப்போதுதான் நின்றுகொண்டே சும்மா தூங்கிக் கொண்டிருந்த சாதுவான வரிக்குதிரைகளை பிரிட்டிஷ்காரன் பார்த்தான். அவற்றைப் பிடித்து பயிற்சி கொடுக்க ஆரம்பித்தான். வரிக்குதிரை ஒன்றை அடங்கச் செய்து, மனிதன் சொல்லும் வேலைகளை எல்லாம் செய்யும்படி பழக்குவதற்கு சுமார் இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டன.

பின் வரிக்குதிரைகளும் வண்டி இழுக்க ஆரம்பித்தன. அவற்றின் முதுகிலும் பொதி ஏறியது. முதுகில் சேணத்தைப் பூட்டி ஐரோப்பிய அதிகாரிகள் ஏறி உட்கார்ந்து வலம் வந்தனர். ராணுவப் பணிகளுக்காகவும் வரிக்குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டு போலோ விளையாடினார்கள். Come on… Come on… என்று கூவியபடியே வரிக்குதிரைப் பந்தயங்கள் நடத்தப்பட்டன. சர்க்கஸ் காட்டினார்கள். சகல விதங்களிலும் அவற்றை நச்சரித்தான் மனிதன். பின் ஐரோப்பியக் கண்டத்துக்கும், குறிப்பாக பிரிட்டனுக்கும் வரிக்குதிரைகள் கொண்டு செல்லப்பட்டன. லண்டன் வீதிகளில் வரிக்குதிரை சாரட்டில் வலம் வருவது என்பது கௌரவமான விஷயமாகக் கருதப்பட்டது.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கும் வரிக்குதிரைகளைக் கொண்டு வந்து பயன்படுத்தியதற்கான சான்றுகள் உண்டு. முல்லிக் பரம்பரையினர் கல்கத்தாவில் வாழ்ந்த மாபெரும் செல்வந்தர்கள். அந்தப் பரம்பரையில் வந்த மன்மதநாத் முல்லிக் என்பவர், கல்கத்தாவின் அலிபூர் மிருகக்காட்சி சாலைக்குச் சென்றார். அங்கே தேமேவென புல் சாப்பிட்டுக் கொண்டிருந்த வரிக்குதிரைகளைப் பார்த்தார். மிகவும் பிடித்திருந்தது. ‘அவற்றை வாங்கிக் கொள்கிறேன்’ என்றார். சுமார் ஆறாயிரம் ரூபாய் கொடுத்து அந்த வரிக்குதிரைகளை மன்மதநாத் வாங்கிக் கொண்டதாகக் குறிப்பு ஒன்று உண்டு.

ஏராளமான குதிரைகள் இருந்த அவரது லாயத்தில், இரண்டு வரிக்குதிரைகளும் சேர்ந்து கொண்டன. சில மாதங்கள் பயிற்சிகளுக்குப் பிறகு வரிக்குதிரை பூண்டிய வண்டியை ஓட்டிக் கொண்டு கல்கத்தா வீதிகளில் வலம் வர ஆரம்பித்தார் மன்மதநாத். எல்லோரும் வாய்பிளந்து பார்த்தார்கள். மன்மதநாத் வரிக்குதிரை வண்டி ஓட்டும் ஒரு புகைப்படம் புகழ்பெற்றது.

சென்ற நூற்றாண்டில் கார்கள் புழக்கத்துக்கு வர ஆரம்பித்த பிறகு வரிக்குதிரைகளுக்குக் கொஞ்சம்

கொஞ்சமாக விடுதலை கிடைக்க ஆரம்பித்தது. மீண்டும் அவை அக்கடாவெனப் புல்லை மேய்ந்து கொண்டு, ஒன்றை ஒன்று கழுத்தைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டே தூங்க ஆரம்பித்தன.

**நோபல் அமைதிப் பரிசு ஹிட்லருக்கு?**

சென்ற நூற்றாண்டின் உலகின் டாப்மோஸ்ட் சர்வாதிகாரி ஹிட்லர். இரண்டாம் உலகப்போரை ஆரம்பிப்பதற்கான காரியங்களில் ஹிட்லர் ஈடுபட்டிருந்த காலம் அது. அப்போது ஸ்வீடனைச் சேர்ந்த அரசியல்வாதியான E.G.C. பிராண்ட் என்பவர், 'ஹிட்லருக்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு' வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்தார். ஹிட்லரின் தீவிர எதிர்ப்பாளரான பிராண்ட் செய்த கேலியான விமரிசனம் என்று அது புரிந்து கொள்ளப்பட்டது.

ஹிட்லரைப் போலவே இரண்டாம் உலகப் போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்று குவித்தவர் சோவியத் யூனியனின் தலைவரான ஜோசப் ஸ்டாலின். இரண்டாம் உலகப்போரை வெற்றிகரமாக முடித்துவைத்தவர் ஸ்டாலின். எனவே அவருக்கு நோபல் அமைதிப் பரிசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள், 1945 மற்றும் 1948-ம் ஆண்டுகளில் எழுந்தன.

அதே காலத்தில் வாழ்ந்த இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினியின் பெயரும் நோபல் அமைதிப் பரிசுக்காக ஒருமுறை பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. நல்லவேளையாக இவர்கள் யாருக்கும் அந்தப் பரிசு வழங்கப்படவில்லை. அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அப்போதே அந்த அமைதிப் பரிசு தன் மன அமைதியை இழந்திருக்கும்.

**ஓட்டை, ஓவியம், ஒன்றேகால் மில்லியன்!**

அன்றைக்கு அந்த அமெரிக்கர், மாஸ்டர்பீஸ் என்ற போர்ட் கேம் விளையாடிக் கொண்டிருந்தார். ஓவியங்களை ஏலம்

கேட்பது, ஏலம் விடுவது என்பது அந்த விளையாட்டின் அடிப்படை. அப்போது ஒரு கார்டில் ஓர் ஓவியத்தைக் கண்டார். பொன்னிற வெல்வெட் துணி ஒன்றில், வெள்ளை நிற மேக்னோலியா மலர்கள் வைக்கப்பட்டிருப்பது போன்ற ஓவியம். இதை எங்கேயோ பார்த்திருக்கிறேனே என்று யோசித்தபோது, பளிச்சென தனது வீட்டில்தான் அந்த ஓவியம் தொங்க விடப்பட்டிருப்பது நினைவுக்கு வந்தது.

வீட்டுச் சுவரில் ஓட்டை விழுந்திருந்தது. அதைச் சரிசெய்ய அதிகம் செலவு செய்ய வேண்டியதிருக்கும் என்று யோசித்த அந்த அமெரிக்கர், பழைய பொருள்கள் விற்கும் கடை ஒன்றில் $29 விலையில் அந்த மேக்னோலியா மலர்கள் ஓவியத்தை வாங்கித் தொங்க விட்டிருந்தார். பல வருடங்களாக வீட்டுச் சுவரின் ஓட்டையை அந்த ஓவியம் மறைத்துக் கொண்டிருந்தது.

‘இது என்ன ஓவியம்?’ என்று கேட்டார் அவர். உடன் விளையாடிக் கொண்டிருந்த விவரமறிந்த நண்பர், Magnolias on Gold Velvet Cloth என்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற அமெரிக்க ஓவியரான மார்ட்டின் ஜான்ஸன் ஹெடெ என்பவர் வரைந்தது. அவர், பல்வேறு விதமான பூக்களைத் தத்ரூபமாக வரைவதில் கில்லாடி.

தன் வீட்டில் இருப்பது அசல் மேக்னோலியா மலர்கள் ஓவியமா என்று அறிய மான்ஹட்டன் நகரத்திலிருக்கும் கென்னடி அருங்காட்சியகத்துக்கு ஓவியத்தின் புகைப்படங்களை மெயிலில் அனுப்பினார் அந்த அமெரிக்கர். அது அசல் ஓவியம் என்று நிரூபிக்கப்பட்டது. ஹவுஸ்டன் நகரத்திலிருக்கும் அருங்காட்சியத்தைச் சேர்ந்தவர்கள், அந்த மேக்னோலியா மலர்கள் ஓவியத்தை வாங்கிக் கொண்டார்கள்.

பழைய கடையில் $29 விலையில் வாங்கப்பட்ட அந்த ஓவியம், பல ஆண்டுகள் வெறுமனே சுவற்றின் ஓட்டையை மறைக்கப் பயன்படுத்தப்பட்ட அந்த ஓவியம், இறுதியில் $1.25 மில்லியனுக்கு விலைபோனது. அந்த

நபர், அந்தப் பணத்தைக் கொண்டு வீட்டின் சுவர் ஓட்டையைச் சரிசெய்து கொண்டார்.

### பாப்கார்னுக்குள் ஆவி!

கி.பி. 1950 சமயத்தில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களும் மாணவர்களும் தொல்லியல் ஆய்வுகள் செய்தனர். அப்போது அவர்களுக்குப் பலவிதமான மக்காச்சோளத்தின் படிமங்கள் கிடைத்தன. மேலும் ஆழமாகத் தோண்டிப் பார்த்தபோது, நன்கு பொரிந்த சோளப்பொரிகள் சிலவற்றையும், பொரிக்கப்படாத சோள மணிகள் சிலவற்றையும் கண்டுபிடித்தனர். கார்பன் வயதுக் கணக்குப்படி அந்த ஆதி பாப்கார்னின் வயது சுமார் 5600 வருடங்கள் என்று கணிக்கப்பட்டது.

நாம் மட்டுமல்ல, ஆதி மனிதனும் ஸ்நாக்ஸாக பாப்கார்னைத்தான் உண்டிருக்கிறான் என்று அப்போது கண்டுபிடிக்கப்பட்டது. அன்றைய மனிதன் மணலைச் சூடாக்கி, அதில் மக்காச்சோள மணிகளை இட்டு பாப்கார்ன் பொரித்து சாப்பிட்டிருக்கிறான் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

மெக்ஸிகோவின் பழங்குடியினரான அஸ்டெக் இன மக்களின் விருப்பத்துக்குரிய நொறுக்குத் தீனியாக பாப்கார்ன் இருந்தது. அஸ்டெக் மக்கள், பாப்கார்னை அலங்காரத் தோரணங்களாக, உடல் பாகங்களில் அணியும் நகைகளாகவும் பயன்படுத்தி வந்தனர். பாப்கார்ன் கிரீடம் செய்து கடவுள் உருவங்களுக்கு அணிவித்தனர். கடவுளின் சிலைகளுக்கு பாப்கார்ன் அபிஷேகமும் செய்தனர். அஸ்டெக் பெண்கள், பாப்கார்னால் ஆன அணிகலன்களை அணிந்துகொண்டு நடனமாடும் வழக்கம் வைத்திருந்தனர்.

மக்காச்சோள மணி எவ்விதம் பொரிகிறது என்பதற்கான அறிவியல்பூர்வமான விளக்கம் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டாலும், அமெரிக்கப் பூர்வகுடிகளின்

நம்பிக்கை வேறு மாதிரிதான் இருந்தது. அது என்னெவென்றால்…

ஒவ்வொரு மக்காச்சோள மணியும் இறந்துபோன முன்னோர்களின் வீடு. அங்கே நம் முன்னோர்களின் ஆவிகள் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கின்றன. எப்போது அதைச் சூடு செய்கிறோமோ, அந்த ஆவிகள் கோபமடைகின்றன. அதனால் குதிக்கின்றன. சூடு அதிகமாகி வீடு வெடிக்கும்போது, அந்த ஆவிகள் இடத்தைக் காலி செய்துவிட்டுக் கிளம்புகின்றன.

**மோட்டார் சைக்கிள் ரதங்கள்**

அந்தக் காலத்தில் ரோமானிய சாம்ராஜ்ஜியத்தில் குதிரைகள் பூட்டிய ரதங்களில் பந்தயங்கள் வைத்து விளையாடினார்கள். சுமார் இரண்டரை லட்சம் மக்கள் அமர்ந்து ரசிக்கும் மைதானத்தில் இந்த ரதப் போட்டிகள் நடைபெற்றன. நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட ரதப் போட்டிகள் நடைபெற்றன. இரண்டு குதிரைகள், ஒற்றைக் குதிரை ரதப் போட்டிகளும் நடத்தப்பட்டன. இவை பண்டைய ஒலிம்பிக் போட்டிகளிலும் இடம்பெற்றிருந்ததாகக் குறிப்புகள் உண்டு.

1920-களில் விதவிதமான மோட்டார் சைக்கிள்கள் பிரபலமான காலத்தில் ரோமின் ரதப் போட்டிகளுக்கு மறு உருவம் கொடுக்க சிலர் முயற்சிகள் மேற்கொண்டனர். அதாவது ரதங்களில் குதிரைகளுக்குப் பதிலாக மோட்டார் சைக்கிள்களைப் பூட்டினர். மோட்டார் சைக்கிளுடன் இணைக்கப்பட்ட தோலால் ஆன கடிவாளத்தில் அதனை இயக்கும், கட்டுப்படுத்தும் பட்டன்களை உருவாக்கிக் கொண்டனர். ஒன்று முதல் நான்கு மோட்டார் சைக்கிள்கள் பூட்டிய ரதங்களில் இந்தப் பந்தயங்கள் நடத்தப்பட்டன. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, நியு ஸிலாந்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் 1930-கள் வரை இந்த மாதிரி மோட்டார் சைக்கிள் ரதப் பந்தயங்கள் வழக்கத்தில் இருந்தன.

அதிலும் பலர், பண்டைய ரோமானியர்கள் போலவே கவுன் மேல், நீள அங்கி அணிந்து கொண்டு தலையில் உலோகத்தால் அல்லது மலரால் ஆன கீரிடம் சூட்டிக் கொண்டு பந்தயங்களில் கலந்து கொண்டனர். பிறகு இந்தப் பந்தயங்களும் நின்று போயின.

வரலாறு திரும்பும் என்பார்களே! மீண்டும் பைக் ரதப் பந்தயங்கள் உயிர் பெறவும் வாய்ப்பிருக்கிறது.

**சிக்கன் டின்னர்!**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரஷ்ய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய், சைவ உணவுப் பழக்கத்தைத் தீவிரமாகக் கடைபிடித்தவர். அகிம்சைதான் மிகச்சிறந்த போராட்ட வழி என்பதிலும் நம்பிக்கை கொண்டவர்.

டால்ஸ்டாயின் வீட்டில் எப்போதுமே சைவ சமையல்தான். அவரது இரண்டு மகள்களுமே சைவ உணவுகளையே விரும்பி உண்டார்கள். ஒருநாள், டால்ஸ்டாயின் வீட்டுக்கு அவரது உறவுக்காரப் பெண்ணான டட்யானா வருவதாக இருந்தது. டட்யானாவுக்கு மாமிசம் இல்லாமல் ஒருவேளை உணவுகூட இறங்காது.

இரவு நேரம். உணவு மேஜை. டட்யானா வந்து அமர்ந்தார். ‘என்ன சாப்பாடு சமைத்திருக்கிறீர்கள்?’ என்று கேட்டார். ‘வழக்கம்போல சுவையான, சக்திமிக்க, அருமையான சைவ உணவுகள்’ என்றார் டால்ஸ்டாய்.

டட்யானாவின் முகம் மாறியது. அதேநேரம் மேஜையில் தனக்கு முன் இறைச்சி வெட்டும் கத்தி வைக்கப்பட்டு இருப்பதைக் கண்டார். காலடியில் கொக்.. கொக்.. என்ற சத்தம் கேட்டு குனிந்து பார்த்தார். கோழி ஒன்றை அவரது நாற்காலியில் கட்டிப் போட்டிருந்தார் டால்ஸ்டாய்.

‘என்னது இது?’ என்று புரியாமல் கேட்டார் டட்யானா!

‘நாங்கள் கோழி சாப்பிட மாட்டோம். சமைக்கவும் மாட்டோம். அதேசமயம் விருந்தினரது விருப்பத்தையும் நிறைவேற்ற வேண்டும் அல்லவா. தேவைப்பட்டால் நீங்களே கத்தியை எடுத்து...’ என்று சொல்ல, டட்யானா சிரித்துவிட்டார்.

டட்யானாவுக்கும் சைவ உணவே பரிமாறப்பட்டது. அவிழ்த்துவிடப்பட்ட அந்தக் கோழி, டால்ஸ்டாய்க்கு நன்றி சொன்னதாகக் குறிப்புகள் இல்லை.

**அசிங்கப்பட்டார் ஹிட்லர்!**

போர்க்காலத்தில் எதிரி நாடுகளின் மக்களை மிரட்டும் வகையில் போர் விமானங்களில் பறந்தபடியே துண்டுப் பிரசுரங்களைப் பறக்க விடும் உத்தி முதலாம் உலகப்போரில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போதும், ஹிட்லர் அத்தகைய உத்திகளைப் பயன்படுத்தச் சொல்லி ஜெர்மன் விமானப்படைக்கு உத்தரவிட்டார்.

அதற்கென்று பிரத்யேகமாக துண்டுப் பிரசுரங்கள் மிரட்டலான வாசகங்களுடன் தயாரிக்கப்பட்டன. நோட்டீஸின் ஒரு பக்கம் மரங்களுடன் கூடிய அழகிய இயற்கைக் காட்சி. மறுபக்கம் திருப்பினால், கல்லறையும் எலும்புக்கூடும் இருக்கும். இதுதான் உங்களுக்காகக் காத்திருக்கிறது என்றபடியான வாசகங்கள் அதில் பளிச்சிடும். ‘அடுத்த வாரம் மாபெரும் புதிய தாக்குதல் நடைபெற இருக்கிறது. உங்கள் சிந்தனையைத் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள்’ என்று ஜெர்மானிய அதிகாரி வீரர்களுக்குக் கட்டளையிடுவதுபோல இன்னொரு நோட்டீஸ்.

இப்படி விதவிதமான மிரட்டல் துண்டுப் பிரசுரங்களை அள்ளிக் கொண்டு லண்டன் மீது ஜெர்மானிய போர் விமானங்கள் பறந்தன. மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நோட்டீஸ்களை வானில் பறந்தபடியே தூவின. காற்றின் காரணமாக பல நோட்டீஸ்கள்

யாருமில்லாத இடங்களிலோ, நீரிலோ சென்று விழுந்து வீணாகின.

ஊருக்குள் விழுந்த நோட்டீஸ்களை லண்டன் மக்கள் வீணாக்கவில்லை. போரின் காரணமாக டாய்லெட் பேப்பர்கள் தட்டுப்பாடு இருந்தது. எனவே ஹிட்லரின் மிரட்டல் நோட்டீஸ்களைக் கவனமாகச் சேகரித்து அதற்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

**ஸ்பெல்லிங் மிஸ்டேக்!**

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டனின் புகழ்பெற்ற பந்தயக்குதிரையாக Potoooooooo என்ற பெயர் கொண்ட குதிரை கலக்கியது. அதன் பெயர், Pot-8-Os அல்லது Pot8Os என்றும் சொல்லப்படுவது உண்டு.

அந்தக் குதிரையின் சொந்தக்காரர் பிரிட்டிஷின் ஒரு பகுதியின் நிர்வாக அதிகாரியாக விளங்கிய Willoughby Bertie. அவர் வளர்த்த பல குதிரைகள், பந்தயங்களின் வெற்றிக் குதிரைகளாக பிரிட்டனைக் கலக்கின. அதில் உலகப்புகழ்பெற்ற குதிரை என்றால் அது நிச்சயம் Potoooooooo-தான். சுமார் 30 பந்தயங்களில் Potoooooooo ஜெயித்திருக்கிறது. குதிரைப் பந்தய வரலாற்றில் மாபெரும் சாதனை இது.

சரி, அந்தக் குதிரைக்கு ஏன் இப்படி ஒரு பெயர் அமைந்தது?

பெர்ட்டி, குதிரைக்கு Potatoes என்ற பெயரைத்தான் வைக்க விரும்பினார். தனது குதிரை லாயத்தில் வேலை பார்த்த பையனிடம் குதிரைக்கு உணவளிக்கும் தொட்டியில் Potatoes என்ற பெயரை எழுதி வைக்கச் சொன்னார். ஒவ்வொரு குதிரையின் உணவுக்கான தொட்டியிலும் அதன் பெயரை எழுதி வைப்பவது வழக்கம்.

அந்தப் பையனுக்கு Potatoes என்பதற்கான ஸ்பெல்லிங் தெரியவில்லை. Pot என்று எழுதியவன் அதற்கு மேல் என்ன எழுத்து வரும் தெரியாமல் முழித்தான். முதலாளி என்ன சொன்னார்? Pot-eight-O…

அந்த உணவுத் தொட்டியில் Pot-க்குப் பிறகு எட்டு O-க்களை எழுதினான். Potoooooooo. அடுத்த நாள் பெர்ட்டி வந்து பார்த்தார். இதுகூட வித்தியாசமாகத்தான் இருக்கிறது. இதையே பெயராக வைத்துக் கொள்வோம் என்று விட்டுவிட்டார்.

ஸ்பெல்லிங் தெரியாமல் பிறந்த அந்தக் குதிரையின் பெயரான Potoooooooo, இன்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கிறது.

**அய்யய்யோ 13!**

Triskaidekaphobia என்றால் என்ன தெரியுமா?

13 என்ற எண்ணைப் பார்த்தாலே பயப்படுவது. அமெரிக்கர்களுக்கு, சீனர்களுக்கு, எத்தியோப்பியர்களுக்கு, ஐரோப்பியர்களுக்கு, ஏன் சில இந்தியர்களுக்குக்கூட 13 எண் மீது பயம், நடுக்கம் இருக்கிறது.

கிரேக்க மொழியில் tris என்றால் 3. kai என்றால் கூட்டல். deka என்றால் 10. Triskaidekaphobia என்றால் 10+3 குறித்த பயம் என்று பொருள். இதிலும் Friggatriskaidekaphobia என்ற ஒன்று உண்டு. 13-ம் தேதி வெள்ளிக்கிழமைகளில் வந்தால் அதனால் ஏற்படும் அதீத பயம். (ஃபிரிகா என்றால் வைகிங் இன மக்களின் வெள்ளிக்கிழமையைக் குறிக்கும் கடவுள்.)

அமெரிக்காவில் நிறைய கட்டடங்களில் 13-வது தளம் இருக்காது. 12-க்குப் பிறகு 14-ம் தளம் வந்துவிடும். வீட்டு எண் 13 என இருக்காது. அதற்குப் பதிலாக ‘பன்னிரண்டரை’ அல்லது 12A என்று எண் கொடுத்துக் கொள்வார்கள். வாகனங்களின் பதிவு எண்ணில் 13 வராது. தேதி 13-ல் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள். பெரும்பாலும் அரசு விழாக்கள் தேதி 13-ல் நடக்காது. ரயில் நிலையங்களில் 12-க்கு அப்புறம் 14-வது பிளாட்பாரம் இருக்கும். சில விமானங்களில், ரயில்களில் 13 எண் கொண்ட இருக்கையே கிடையாது.

ஒரு மாதத்தின் 13-ம் தேதி வெள்ளி அன்று வந்துவிட்டால் அதனால் கெட்டது நிகழ்ந்துவிடுமோ என்று பயந்து பயந்தே உயிரை விட்டவர்கள் உண்டு. இயேசுவின் கடைசி விருந்தில் கலந்து கொண்டவர்கள் 13 பேர். அதில் யூதாஸ் பதிமூன்றாவதாக உட்கார்ந்திருந்தான். அவனே பின் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். தூக்கில் தொங்கினான். இயேசு 'வெள்ளி' அன்று சிலுவையில் அறையப்பட்டார் என்பது தொடங்கி வைகிங் இன மக்களின் புராணக் கதை, 13-ம் நூற்றாண்டில் நடந்த சிலுவைப் போர்களில் கொல்லப்பட்ட ஏராளமான கிறிஸ்தவர்கள் என்பது வரை பல்வேறு காரணங்கள் '13 வெள்ளி'யின் பயத்தின் பின்னணியில் சொல்லப்படுகின்றன.

வெள்ளிக்கிழமைகளிலோ, 13-ம் தேதியோ கடல் பயணத்தை ஆரம்பித்தால் அது விபத்தில் முடியும் என்ற அசைக்க முடியாத அவநம்பிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவி வந்தது. அதை உடைக்கும்விதமாக பிரிட்டன், வெள்ளிக்கிழமையில் கப்பல் ஒன்றைக் கட்ட ஆரம்பித்தது. அதன் பெயர் HAS Friday. ஒரு வெள்ளிக்கிழமை அன்று கப்பலின் முதல் பயணம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கப்பலின் கேப்டன் பெயர் James Friday. கடலுக்குள் சென்ற கப்பல் திரும்பி வரவே இல்லை. என்ன ஆனது என்று தகவல் கிடைக்கவே இல்லை.

இது அமெரிக்கர்கள் சொல்லும் திகில் சம்பவம். ஆனால், அப்படி ஒரு கப்பல் பிரிட்டனில் கட்டப்பட்டதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. ஆம், பிரிட்ஷார் கப்பல் விடவில்லை. அமெரிக்கர்கள் கப்ஸா விட்டிருக்கார்கள்.

### பூமிக்குள் இன்னொரு கிரகம்!

'பெரியோர்களே! தாய்மார்களே! இந்தப் பூமிக்குள் என்ன இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? அது காலி இடம்தான். அந்தக் காலி இடத்தில் இன்னொரு கிரகம் இருக்கிறது.

பூமியின் உள்ளே மையப்பகுதியில் அமைந்திருக்கும் அற்புதமான கிரகம் அது. அங்கே வேறு ஓர் இன மனிதர்கள் வசிக்கிறார்கள். நம் பூமியின் வட துருவத்திலும், தென் துருவத்திலும் துளைகள் இருக்கின்றன. அந்தத் துளைகள் வழியாக நாம் பயணம் செய்தால் அந்தக் கிரகத்தை அடையலாம். நம்புங்கள். நான் சொல்வது முழுக்க முழுக்க உண்மை!'

இப்படித்தான் 1820-களில் அமெரிக்காவில் ஜான் கிளீவ்ஸ் சைம்மஸ் ஜூனியர் என்ற ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி ஒருவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அதுவும் ஊர், ஊராகச் சென்று இதைச் சொல்லி தனக்கு ஆதரவு திரட்டிக் கொண்டிருந்தார். விஞ்ஞானிகள், அறிஞர்கள் சிரித்தார்கள். பலர் கேலி செய்தார்கள். மக்களில் சிலர் ஒருவேளை உண்மையாக இருக்கலாமோ என்று யோசிக்கவும் செய்தார்கள். எப்படியாவது இந்தத் திட்டத்துக்கு அனுமதி வாங்க வேண்டும். அரசாங்கத்திடம் நிதி வாங்கிக் கொண்டு நூறு பேர் கொண்ட குழுவுடன் ஆர்டிக் பகுதியில் துளை போட்டு இறங்கிவிட வேண்டும் என்று ஜான் கிளீவ்ஸ் பெருங்கனவுடன் திரிந்தார்.

அப்போது அமெரிக்க அதிபராக இருந்தவர், ஜான் குவின்ஸி ஆடம்ஸ். எடக்கு மடக்காக யோசிப்பதில் இன்றைய அதிபரான டொனால்ட் டிரம்புக்கெல்லாம் கொள்ளுத் தாத்தா. அவருக்கு ஜான் கிளீவ்ஸின் வார்த்தைகளில் நம்பிக்கை இருந்தது. 'அப்படி ஓர் அற்புதக் கிரகம் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டால், அங்கிருக்கும் புதிய வளங்களை எல்லாம் அள்ளிக் கொண்டு வரலாம். அந்தப் புதிய மனிதர்களோடு வியாபாரத் தொடர்பு வைத்துக் கொண்டால் அமெரிக்கா செழிக்கும்' என்று கனவு கண்டார் அதிபர் ஜான். ஆகவே, தன் ஆட்சிக் காலத்தில் ஜான் கிளீவ்ஸின் பூமிக்குள் புதிய கிரகத்தைத் தேடும் திட்டத்துக்கு ஒப்புதல் கொடுத்தார்.

நல்லவேளையாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கும் முன் அதிபர் ஜானின் ஆட்சிக்காலம்

முடிவுக்கு வந்தது. இன்னொரு முறை அவர் அமெரிக்க அதிபராகும் வரலாற்றுப் பிழை நிகழவில்லை.

**ரயிலுக்குப் பயந்த அமெரிக்கர்கள்!**

1830-களில் அமெரிக்காவில் நீராவி எஞ்ஜின்களுடன் கூடிய முதல் ரயில்கள் இயங்க ஆரம்பித்தன. ஆச்சரியத்தில் வாய்பிளந்த அமெரிக்க மக்கள், ரயில் கக்கும் அதிகமான புகை, அதன் உருவம், அது போகும் வேகம் ஆகியவற்றைப் பார்த்து பயப்படவும் செய்தார்கள்!

‘இது எவ்வளவு வேகத்தில் போகும்?’

‘மணிக்கு ஐம்பது மைல்கள் வரை போகும்!’

‘என்னது ஐம்பது மைல்கள் வேகமா!’

அவ்வளவு வேகத்தில் ரயில்கள் போனால், அதைத் தாங்கும் சக்தி மனிதனுக்கு இல்லை. மனிதனின் உடல் அதற்கு ஏற்றாற்போல வடிவமைக்கப்படவில்லை என்று அமெரிக்கர்கள் பயந்தார்கள். ‘ஆண்களாவது பரவாயில்லை. பெண்கள் ரயிலில் ஏறினால், அது வேகமாகப் போகும்போது அவர்களது குடல், கர்ப்பப்பை எல்லாம் வெளியில் வந்து விழுந்துவிடும்’ என்றுகூட பயந்தார்கள். இன்னும் சிலர், ‘ஆணாக இருந்தால் என்ன, பெண்ணாக இருந்தால் என்ன, ரயில் இவ்வளவு வேகமாகச் சென்றால் யாருடைய உடல் என்றாலும் அது உருகிக் கரைந்து காணாமல் போய்விடும்’ என்றும் அநியாயத்துக்குப் பயந்தார்கள்.

அதேபோல இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் கார்கள் கண்டுபிடிக்கப்பட்டு புழக்கத்துக்கு வந்தபோதும் மனிதன் அதைக் கண்டு பயப்படவே செய்தான். எந்த ஓர் அறிவியல் கண்டுபிடிப்பும் புதிதாகக் களத்துக்கு வரும்போது அன்றைய மனிதர்கள் பயப்படவே செய்தார்கள் என்பது மறுக்க முடியாத சரித்திர உண்மை.

**சூப்பர் ஹிட் வெற்றுப் புத்தகம்!**

1989-ல் உளவியலாளர் ஆலன் பிரான்ஸிஸ் என்ற பெண், புத்தகம் ஒன்றை வெளியிட்டார். புத்தகத்தின் தலைப்பு Everything Men Know About Women. கடைகளில் புத்தகத்தின் அட்டையைப் பார்த்து ஆர்வத்துடன் எடுத்துப் புரட்டிப் பார்த்த வாசகர்கள் கொஞ்சம் அதிர்ச்சி அடைந்தார்கள். உள்ளே எழுத்துக்களே இல்லை. அடுத்தடுத்தப் பக்கங்களையும் புரட்டினார்கள். அவையும் வெற்றுக் காகிதங்களே. மொத்தம் 128 பக்கங்கள் வெற்றுக் காகிதங்களாக இருக்க ஒரு புத்தகம். ஆலன் பிரான்ஸிஸ் சொல்ல வந்த கருத்தும் அதுதான். ஆண்களுக்குப் பெண்களைப் பற்றி எதுவுமே தெரியாது.

அதைப் புரிந்துகொண்ட பெண்களும் ஆண்களும் புத்தகத்தைப் புரட்டிவிட்டு 'குபீர்' எனச் சிரிக்க ஆரம்பித்தார்கள். பலர் ஒருவருக்கொருவர் பரிசளிக்கவும் தொடங்கினார்கள். இந்த வெற்றுப் புத்தகம் வெளியானபோது மில்லியன் பிரதிகள் விற்று சூப்பர் ஹிட் ஆனது. இப்போதும்கூட 25-ம் ஆண்டு எடிசனாக இந்தப் புத்தகம் விற்றுக் கொண்டிருக்கிறது. ஆன்லைன் ஸ்டோர்களிலும் இந்தப் புத்தகத்தைப் பணம் கொடுத்து வாங்கும் நல்லவர்கள் இருக்கிறார்கள். பலர் வார்த்தைகளற்ற இந்தப் புத்தகத்துக்குப் பக்கம் பக்கமாக விமரிசனமும் எழுதியிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம், 128 காலிப் பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தை pdf வடிவில் தேடி, டௌன்லோட் செய்பவர்களும் உலகில் நம்முடன் வசிக்கிறார்கள்!

## டூ மினிட்ஸ் வரலாறு

குழந்தைகள் எல்லோருக்கும் பிடித்தமான பொதுவான உணவு என்றால் அது இன்ஸ்டண்ட் நூடுல்ஸ். தைவானில் பிறந்த ஜப்பானியர் மோமோ ஃபுகு அன்டோ என்பவரே இன்ஸ்டண்ட் நூடுல்ஸைக் கண்டுபிடித்தவர். நவீன நூடுல்ஸின் தந்தை என்றும் இவர் அழைக்கப்படுகிறார். சட்டெனச் சில நிமிடங்களில் தயார்

செய்யும் Ramen என்ற இன்ஸ்டண்ட் நூடுல்ஸை, 1958-ம் ஆண்டு சந்தைக்குக் கொண்டு வந்தார். இதன் இன்றைய சந்தைப் பெயர்தான் Top Ramen.

ஒரு கப். அதனுள் மசாலா சேர்க்கப்பட்ட நூடுல்ஸ். சுடுதண்ணீர் சேர்த்தால் போதும். பசி தீர்க்க உணவு ரெடி. உதடுகளுக்கிடையில் நூடுல்ஸை உறியலாம். இன்றைய தலைமுறையினர் அதிகம் விரும்பும் Cup Noodles. இதையும் மோமோஃபுகுதான் 1971-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார். கற்பனை வளத்துடன் புதிது புதிதாக எதையாவது கண்டுபிடித்துக் கொண்டே இருக்கும் ஜப்பானியர்கள், இருபதாம் நூற்றாண்டில் தங்களுடைய ஈடு இணையற்ற கண்டுபிடிப்பாகப் பெருமையுடன் சொல்லிக் கொள்வது, இன்ஸ்டண்ட் நூடுல்ஸைத்தான்.

நூடுல்ஸை உதடுகளுக்கிடையில் வைத்து உறிஞ்சி உள்ளே இழுப்பது பலருக்கும் பிடித்தமான செயல். ஆனால், உணவு மேஜை நாகரிகத்தில் அது விரும்பத்தகாத செயல். ஜப்பானில் அப்படிக் கிடையாது. ஒருவர் உஸ்ஸ்ஸ்ஸ்ஸ் என சத்தம் எழுப்பி, நூடுல்ஸை உறிஞ்சி உண்கிறார் எனில், அவருக்கு அந்த உணவு மிகவும் பிடித்திருக்கிறது. நூடுல்ஸைச் சமைத்தவருக்கு சத்தமெழுப்பி நன்றி சொல்கிறார் என்று அர்த்தம்.

### இரண்டு குச்சிகளின் கதை!

சீனர்களோ, ஜப்பானியர்களோ சாப்பிடும்போது கவனித்திருப்பீர்கள். அவர்களது விரல்களுக்கிடையில் நீளமான இரண்டு குச்சிகள் முளைத்திருக்கும். அதை வைத்துப் படு லாகவமாக உணவை உள்ளே தள்ளுவார்கள். நமக்கு அதுவே ஒரு சர்க்கஸ் வித்தை போன்று தோன்றும். உண்பதற்காக உபயோகப்படுத்தப்படும் அந்தக் குச்சிகளின் பெயர், ChopSticks. சித்திரமும் கைப்பழக்கம் என்பதுபோல, அவர்களுக்கெல்லாம் சாப்ஸ்டிக்ஸும் கைப்பழக்கம்.

எலும்பு, பிளாஸ்டிக், வெள்ளி, தங்கம், வெண்கலம், பச்சைக்கல், யானைத்தந்தம், பீங்கான் பல்வேறு விதமான

சாப்ஸ்டிக்ஸ் பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்போது புழக்கத்தில் இருப்பவை மரத்தால் செய்யப்பட்ட, குறிப்பாக மூங்கிலால் தயாரிக்கப்பட்ட சாப்ஸ்டிக்ஸ்தாம்.

சாப்ஸ்டிக்ஸைச் சாப்பிடும் கிண்ணத்தில் தட்டி, சத்தம் எழுப்பாமல்தான் சாப்பிட வேண்டும். பிச்சை எடுத்துச் சாப்பிடுபவர்களே சத்தம் எழுப்புவார்கள் என்பது சீனர்களின் கருத்து. சாப்ஸ்டிக்ஸை யார் முன்பும் நீட்டிப் பேசக்கூடாது. அது மரியாதைக் குறைவான செயல். சாப்ஸ்டிக்கின் முனைகளில் ஒட்டியிருக்கும் உணவுத் துணுக்குகளை நாக்கால் நக்கி உண்ணக் கூடாது. அப்படிச் செய்பவர்கள் பண்பில்லாத குடும்பத்தில் பிறந்தவர்கள்.

அழகாக பெயிண்ட் செய்யப்பட்ட, சின்னதாக உருவங்கள் செதுக்கப்பட்ட, கலைநயமிக்க சாப்ஸ்டிக்ஸை, கல்யாணப் பரிசாக, பிறந்தநாள் பரிசாக சீனர்கள் கொடுக்கிறார்கள். திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஜோடி, ஆளுக்கொரு சாப்ஸ்டிக் (ஒரே மாதிரி வடிவில், நீளத்தில்) வாங்கி வைக்கிறார்கள். அந்த சாப்ஸ்டிக்ஸ் ஜோடி போல தாங்களும் வாழ்வில் இணைபிரியாமல் இன்புற்று வாழ வேண்டும் என்பது நம்பிக்கை.

சாப்பிடும்போது சாப்ஸ்டிக்ஸ் கைதவறி கீழே விழுந்தது என்றால், அன்று பஸ், ப்ளைட், ரயில், மொபைல் போன்ற ஏதோ ஒரு விஷயத்தைத் தவற விடப்போகிறோமென ஜப்பானியர்கள் பதட்டம் அடைந்துவிடுவார்கள். உணவு மேசையில் தங்களுக்கு வைக்கப்படும் சாப்ஸ்டிக்ஸ் இரண்டும் வேறு வேறு நீளத்தில் இருந்தால், ‘ஏதோ கெட்டது நடக்கப் போகுது’ என்று சீனர்களில் சிலர் அழவே ஆரம்பித்துவிடுவார்கள்.

**மரத்தைக் கைது செய்யுங்கள்!**

1898. இந்தியாவின் லாண்டி கோட்டல் என்ற கிராமம். அங்கே பணியில் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் அன்றைக்கு நன்றாகக் குடித்திருந்தார். போதையில் வலம் வந்த அவர், அந்த ஆலமரத்தின் அருகே வந்தார். ‘ஏ மரமே! நீ

அங்கேதானே இருந்தாய். இங்கே ஏன் நகர்ந்து வந்தாய்?’ என்று கத்தினார். போதையில் அவருக்கு மரம் நகர்ந்து வந்ததாகத் தெரிந்தது.

‘யாரங்கே? இந்த மரத்தைக் கைது செய்யுங்கள்!’ என்று கட்டளையிட்டார். உயர் அதிகாரியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் அல்லவா. போலீஸ் அதிகாரி ஒருவரும் அந்த ஆலமரத்தைச் சங்கிலியால் கட்டிப் போட்டார்.

பிரிட்டிஷார், இந்தியாவுக்கு விடுதலை கொடுத்துவிட்டுச் செல்லும்வரை, அந்த ஆலமரம் கைது செய்யப்பட்டே இருந்தது. இந்தியப் பிரிவினையின்போது, வடமேற்கு பாகிஸ்தானின் ஓர் ஊராக லாண்டி கோட்டல் பிரிந்துபோனது. 120 வருடங்களுக்கும் மேலாக அந்தச் சங்கிலியிலிருந்து ஆலமரத்துக்கு விடுதலை கிட்டவில்லை.

பிரிட்டிஷார் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்ததன் அடையாளமாக அந்த ஆலமரம் இப்போதும் கைதியாகவே நின்று கொண்டிருக்கிறது.

***

## சிரிக்கச் சிரிக்கச் சரித்திரம் 3.0-ல் சந்திப்போம்.

## அமேசான் கிண்டிலில் கிடைக்கும் ஆசிரியரின் பிற புத்தகங்கள்

சந்திரபாபு : கண்ணீரும் புன்னகையும்

எம்.ஆர். ராதா : கலகக்காரனின் கதை

மாண்புமிகு மருத்துவர்கள் (பகுதி 1 & 2)